## APP ஒன்றை யாரால் ஏற்படுத்த இயலும்?

நியமிக்கப்பட்ட பாதுகாவலர் ('வயதுவந்தோரது பாதுகாவலர்கள் சட்டத்தின் கீழ்) ஒருவர் இல்லாத, வயதுவந்த (குறைந்த பட்சம் 18 வயது), மற்றும் முடிவுகளை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ள எவரொருவரும் இதை ஏற்படுத்தலாம்.

முடிவுகளை மேற்கொள்வதற்கான திறன் உள்ளவராகக் கருதப்படுவதற்கு, பின் வருவனவற்றைச் செய்வதற்கான இயலுமை உங்களுக்குக் கட்டாயமாக இருக்கவேண்டும்:

- தகவல்களை விளங்கிக்கொண்டு அவற்றை நினைவில் கொள்வதற்கான இயலுமை,
- முடிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு தகவல்களை விளங்கிக்கொள்வதற்கான திறன்,
- அந்த முடிவை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கான திறன்.

## APP ஒன்றில் உள்ளடங்கக் கூடிய விடயங்கள் யாவை?

உங்களுடைய திட்டத்தில் எந்த விடயங்களை உள்ளடக்கவேண்டும் என்பது உங்களுடைய விருப்பமாகும். பின் வரும் விடயங்களில் எதையும் பற்றிய உங்களுடைய அறிவுறுத்தல்களை நீங்கள் உள்ளடக்கலாம்:

- உங்களுடைய உடல்நலப் பராமரிப்பு;
- வாழ்க்கைப்பாணி குறித்த விருப்பத்தெரிவுகள்;
- உங்களுடைய பண விவகாரங்கள்;
- உங்களுக்கான முடிவுகளை யார் மேற்கொள்ளவேண்டும் என்பது.

உங்களுடைய திட்டத்தைப் பற்றி மன மாற்றம் எதுவும் உங்களுக்கு ஏற்பட்டால், முடிவுகளை மேற்கொள்வதற்கான திறன் உங்களுக்கு இன்னமும் இருக்கும் பட்சத்தில், உங்களுடைய திட்டத்தினை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம், அல்லது அதை இரத்து செய்யலாம்

APP-யில் மூன்று பகுதிகள் உள்ளன. அந்த மூன்று பகுதிகள் அனைத்தையும் நீங்கள் பூர்த்தி செய்யவேண்டிய அவசியம் இல்லை, ஆனால் அவற்றை நீங்கள் கவனமாக வாசிக்கவேண்டும் என்பது முக்கியம்.

### 1. பராமரிப்பு குறித்த முன்கூட்டிய கூற்று (Advance Care Statement)

இந்த ஆவணமானது உங்களுடைய விருப்பங்களையும், வேறொருவர் உங்கள் சார்பாக முடிவுகளை மேற்கொள்வாரேயானால் அவர் எவ்வாறு செயல்படவேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதையும் பற்றியதாகும்.

அன்றாட வாழ்க்கையில் ஒருவர் மேற்கொள்ளும் அலுவல்களை இது உள்ளடக்கும், உதாரணமாக, உங்களுடைய உணவு, உடல்நலப் பராமரிப்பு, வசிப்பிடம், வேலை, படிப்பு, கலாசார அல்லது ஆன்மீக வேண்டுகோள்கள், பண விவகாரங்கள், சொத்து நிர்வாகம் அல்லது சொத்து உடைமை ஆகியன இதில் உள்ளடங்கும்.

### 2. 'சம்மதம் குறித்த முன்கூட்டிய முடிவுகள்' (Advance Consent Decisions)

உங்களுடைய சுகாதாராப் பராமரிப்பு வழங்குநரை இவை சட்டரீதியாகக் கட்டுப்படுத்தும், மற்றும் உறுப்பு-மாற்று சிகிச்சைகள், நோவுதணிப்புப் பராமரிப்பு, உயிர்காப்பு சாதனப் பயன்பாடு குறித்த அறிவுறுத்தல்கள், அல்லது குறிப்பிட்ட சில அறிவுறுத்தல்கள் - உதாரணமாக, குருதியேற்றங்கள் மற்றும் குழாய் மூலமாக வயிற்றிற்குள் உணவு செலுத்தப்படல் என்பன வேண்டாம் என்று மறுப்பது குறித்த முடிவுகளை இவை உள்ளடக்கும். எவ்வொரு எதிர்கால உடல் நலப் பராமரிப்பு மற்றும் மருத்துவ சிகிச்சையைப் பற்றிய உங்களுடைய அறிவுறுத்தல்களையும் மருத்துவர்களும் மருத்துவத் தொழிலர்களும் கட்டாயம் பின்பற்றியாக வேண்டும்.

உடல்நலப் பராமரிப்பு குறித்த உங்களுடைய முடிவுகளைப் பற்றி மருத்துவத் தொழிலர் ஒருவரிடமிருந்து நீங்கள் அறிவுரை பெறவேண்டுமென சிபாரிசு செய்யப்படுகிறது.

### 3. 'முடிவெடுப்பாளர்கள்' (Decision-makers)

தனியாகவோ, இணைவாகவோ செயற்படும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட முடிவெடுப்பாளர்களை நீங்கள் நியமிக்கலாம், அல்லது வெவ்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு முடிவெடுப்பாளர்களை நீங்கள் நியமிக்கலாம். – உதாரணமாக உங்களுடைய உடல்நலம் மற்றும் வாழ்க்கைப்பாணி குறித்த முடிவுகளுக்காக ஒருவரையும், உங்களுடைய பண விவகாரங்களை நிர்வகிக்க வேறொருவரையும் நீங்கள் நியமனம் செய்யலாம். நீங்கள் நியமிக்கும் நபர் இந்த முடிவுகளைப் பொறுத்தவரை உங்களுடைய நம்பிக்கைக்கு உரியவராக இருக்கவேண்டும்.

APP ஒன்றின் கீழ் முடிவெடுப்பாளராக நியமிக்கப்படும் நபருக்கு APP ஒன்றை ஏற்படுத்துவதற்கான, மாற்றுவதற்கான அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் கிடையாது.

## APP ஒன்று எப்போது நடைமுறைக்கு வரும்?

கையெழுத்து இடப்பட்டு, சாட்சிப்படுத்தப்படும் பொழுது APP ஒன்று நடைமுறைக்கு வரும். அதை நீங்கள் மாற்றும் வரை அல்லது இரத்து செய்யும் வரை அல்லது குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ள காலம் முடிவடையும் வரை அது நடைமுறையில் இருக்கும். உங்களுடைய சொந்த முடிவுகளை மேற்கொள்வதற்கான திறனை நீங்கள் இழக்கும்போது மட்டுமே இது நடைமுறைப்படுத்தப்படும். சில சூழல்களில் APP ஒன்றை மாற்றுவதற்கான அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் 'நார்தர்ன் டெரிட்டரி குடிமை மற்றும் நிர்வாக முறையீட்டு மன்ற' (Northern Territory Civil and Administrative Appeals Tribunal) த்திற்கு உள்ளது.

## 'அதிகாரப் பத்திரம்' (Power of Attorney) மற்றும் 'உயில்' (Will) ஒன்றின் மீது ஏற்படும் தாக்கம்

'அதிகாரப் பத்திரம்' (Power of Attorney (POA)) அல்லது உங்களுடைய உயிலின் மீது APP ஒன்று தாக்கம் ஏற்படுத்தாது.

முடிவுகளை மேற்கொள்ளும் திறன் உங்களுக்குத் தொடர்ந்து இருக்கும் பொழுது மட்டுமே 'அதிகாரப் பத்திரம்' (Power of Attorney (POA)) ஒன்று செல்லுபடியாகும்.

## APP ஒன்றை நான் எவ்வாறு ஏற்படுத்தலாம்?

1. 'நார்தர்ன் டெரிட்டரி பொது அறங்காவலர் அலுவலக' (Northern Territory Office of the Public Trustee) த்தில் இருந்து, அல்லது https://nt.gov.au/law/rights/advance-personal-plan எனும் வலைத்தலத்திலிருந்து **APP படிவம் ஒன்றைப் பெறுங்கள்,**

2. **APP -யை பூர்த்தி செய்து முடியுங்கள்,** மற்றும் அதிகாரபூர்வமான சாட்சியாளர் ஒருவரைக் கொண்டு அதை சாட்சிப்படுத்துங்கள் (தகுந்த சாட்சியாளர்களின் பட்டியல் ஒன்று இந்தப் படிவத்தில் உள்ளது).

3. ‘நார்தர்ன் டெரிட்டரி பொது அறங்காவலர்’ (Public Trustee of the Northern Territory) அலுவலகத்தில் **உங்களுடைய Advanced Personal Plan (APP)) (‘தனிநபர் ஒருவரது முன்கூட்டிய திட்டம்’) -ஐப் பதிவு செய்யுங்கள்.** இது சுயவிருப்பாகும், ஆனாலும் உங்களது முடிவெடுப்பாளர்கள் அல்லது மருத்துவத் தொழிலர்களிடம் பிரதி ஒன்று இல்லாத பொழுது இதைக் கண்டெடுப்பதை அவர்களுக்கு இது எளிதாக்கும். பதிவு செய்வது இலவசமாகும், பதிவிற்கான விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கும்.

4. கட்டிடச் சொத்துகள் அல்லது நிலச் சொத்துகள் சம்பந்தப்பட்ட முடிவுகளை மேற்கொள்ள இயலுமான **முடிவெடுப்பாளர் ஒருவரை நீங்கள் நியமித்திருந்தால்,** அதற்குரிய பகுதியானது ‘நார்தர்ன் டெரிட்டரி நில உரிமைப்-பத்திர அலுவலக’(Northern Territory Land Titles Office)த்துடன் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட்டாக வேண்டும், அப்படிச் செய்யாவிட்டால், ‘நில உரிமைப்-பத்திர அலுவலக’(Land Titles Office)த்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நபரை அடையாளம் காண இயலாது. கட்டணம் ஒன்று செல்லுபடியாகும்.

5. உங்களுடைய APP -யில் சுகாதாரப் பராமரிப்பு குறித்த முடிவுகள் உள்ளடங்கியிருந்தால், **உங்களுடைய ‘ஈ-ஹெல்த் பதிவு’ (eHealth record)-ஐ நடப்பு நாள் வரைக்கும் சரியானதாக இருக்குமாறு புதுப்பித்துக்கொண்டிருங்கள்.** ‘ஈ-ஹெல்த் பதிவு’ (eHealth record) ஒன்று உங்களுக்கு இல்லையேல், பின் வருவனவற்றில் ஒன்றைச் செய்வதன் மூலம் நீங்கள் பதிவு செய்யலாம்:

- இணைய வழியில்: www.myhealthrecord.gov.au
- 1800 723 471-ஐத் தொலைபேசி ஊடாக அழைப்பதன் மூலம்
- ‘மெடிகெயர் மையம்’ ஒன்றிற்குச் சென்று அங்கு
- சுகாதாரப் பராமரிப்பு அளிக்கும் அமைப்பு ஒன்றிடமிருந்து பதிவிற்கான உதவியைப் பெறுவதன் மூலமாக.

6. **உங்களுடைய APP -யை பாதுகாப்பான ஒரு இடத்தில் வையுங்கள்,** உதாரணமாக உங்களுடைய உயிலுடன் அதைச் சேர்த்து வைக்கலாம். சான்றுபடுத்தப்பட்ட பிரதி ஒன்றை உங்களுடைய முடிவெடுப்பாளருக்குக் கொடுங்கள். உங்களுடைய ஜீ.பீ அல்லது முதியோர் பராமரிப்பு சேவை வழங்குநருக்கும் பிரதி ஒன்றைக் கொடுப்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

## உபயோகமான தொடர்பு விபரங்கள்

**COTA NT**
‘ஸ்பிலெட் ஹௌஸ்’
(Spillett House)
65 ஸ்மித் ஸ்ட்ரீட்
டார்வின்

மின்னஞ்சல்: admin@cotant.org.au

தொலைபேசி: (08)8941 1004

**‘நார்தர்ன் டெரிட்டரி http://www.dcls.org.au/ பொது அறங்காவலர் அலுவலகம்’ (NT Office of the Public Trustee)**
தொலைபேசி: (08) 8999 7271

**‘டார்வின் சமூக சட்ட சேவை’ (Darwin Community Legal Service Inc)**
தொலைபேசி: (08) 8982 1111

**‘காமன்வெல்த் ‘என் சுகாதாரப் பதிவு” (Commonwealth My Health Record)**
தொலைபேசி: 1800 723 471

**தகவல் மூலங்கள்:**
‘NT அட்டர்னி ஜெனரல் மற்றும் நீதிபதித் திணைக்களம்’ (www.nt.gov.au/law/rights/advance-personal-plan)

‘டார்வின் சமூக சட்ட சேவை அமைப்பு’ (Darwin Community Legal Service)
*www.dcls.org.au*

ஜனவரி 2019 அன்று இருந்தவாறு இந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவல்கள் தற்சமயத்தியவை.

**பொறுப்புத்துறப்பு:** இந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவல்கள் ‘நார்தர்ன் டெர்ரிடரி’யில் உள்ள சட்டங்களுக்கான ஒரு வழிகாட்டியாகும். சட்ட அறிவுரைக்கு ஒரு மாற்றாக இது அமையாது. உங்களுடைய குறிப்பிட்ட சட்டப் பிரச்சினைகளைப் பற்றி நீங்கள் சட்டதரணி ஒருவருடன் பேசவேண்டும்.

**குறிப்பு:**
**‘தனிநபர் ஒருவரது முன்-கூட்டிய திட்டம்’ (Advance Personal Plan) என்பது நீங்கள் மேற்கொள்ளும் முடிவுகளுக்குப் பாதுகாவலாக இருக்கும் முக்கியமானதொரு ஆவணமாகும். இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சட்ட அறிவுரையையும், சுகாதாரப் பராமரிப்பு விடயங்கள் குறித்து மருத்துவத் தொழிலர் ஒருவரது அறிவுரையையும் பெறுவதைக் கருத்தில் கொள்ளுங்கள்.**

PICAC NT

COTA
NORTHERN TERRITORY
*for senior Territorians*

# ‘தனிநபர் ஒருவரது முன்-கூட்டிய திட்டம்’ (Advance Personal Plan (APP)) என்பது என்ன?

**ஒரு ‘தனிநபர் ஒருவரது முன்கூட்டிய திட்டம்’ (Advance Personal Plan (APP)) என்பது உங்களுக்கான முடிவுகளை உங்களால் மேற்கொள்ள இயலாமல் போகும் பட்சத்தில் உங்களுடைய எதிர்கால உடல்நலம், நிதி மற்றும் வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றிய உங்களுடைய தெரிவுகளை விளக்கிச் சொல்லும் ஒரு சட்ட ஆவணமாகும்**

**வயது, நோய், ஒரு விபத்து அல்லது மற்ற வாழ்க்கை-மாற்றத்தை**

ஏற்படுத்தும் நிகழ்வு ஒன்றின் காரணமாக இதைச் செய்யலாம்.

Tamil